அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

ஜீன் - 2024 | மரம் - 3 | கன்று - 6 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-

## கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப் பண்ணுவார்

சங்கீதம் 115:14



ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

அன்பிற்குரிய **ஒலிவமரக் கன்றுகள்** வாசகர்கள் மற்றும் அன்புக் குழந்தைகள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

பரிசுத்த வேதாகமத்தில் குழந்தைகளும், சிறுவர்களும் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் (ஆதி 1:28) என தேவன் மனிதனுக்கு முதல் கட்டளையைக் கொடுத்து குழந்தைகளின் பரலோக வருகையை ஆசீர்வதிக்கிறார். அதனால் தான், தேவனின் கொடையாக அவர்கள் இருக்கிறார்கள்.

தேவனின் வரங்களைப் பாழாக்காமல் இருக்க வேண்டியது நம்மிடம் தரப்பட்டிருக்கும் முதல் கடமை. குழந்தைகளை நல்வழியில் வளர்க்க வேண்டிய கடமையும் பெற்றோருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது ஆன்மீகம் தொடங்கி, வாழ்க்கைப் பாடம் வரை நீள்கிறது.

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதிமொழிகள் 22:6) எனும் வேத வசனம் அதை நமக்கு இன்னும் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது! அப்படியே பிள்ளைகள் பக்கத்திலும் திரும்பி ''என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே'' (நீதி. 1:8) என்கிறது நீதிமொழிகள்.

சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் என்றார் இயேசு (மாற்கு 10:14). சிறு பிள்ளைகள் இயேசுவின் மிகப்பெரிய பிரியத்துக்குரியவர்களாக இருக்கின்றனர். இயேசு கோபமடையும் சந்தர்ப்பங்கள் மிகவும் அபூர்வம். தந்தையின் வீடு சந்தை போல மாறி, அதன் அர்த்தத்தை இழந்தபோது கோபமடைந்தார். இப்போது குழந்தைகளைத் தடுப்பதைக் கண்டு கோபமடைகிறார். காரணம் பரலோக ராஜ்ஜியம் சிறுபிள்ளைகளைப் போல மாறுவோருக்கானது என்கிறார் இயேசு.

சிறுவர்கள் நமது வாழ்வின் மிக முக்கியமானவர்கள். அவர்களை சிறந்த ஆன்மீக வெளிச்சத்தில் வளர்க்க வேண்டியது நமது கடமையாகும். நமது சமூகத்தில் இருக்கின்ற சிறுவர்களை நேசிப்போம், வழிகாட்டுவோம், ஏற்றுக் கொள்வோம். அவர்களை எந்த விதத்திலும் தவறான வழிக்கு அழைத்துச் செல்லாதிருப்போம். அவர்கள் தூய்மையானவர்கள். அத்தகைய தூய உள்ளத்தோர் பரலோக வாழ்வின் சொந்தக்காரர்கள் என்பதை இயேசு தனது மலைப்பிரசங்கத்தில் உறுதிப்படுத்துகிறார்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**


# வெள்ளரிக்காய்
## (Cucumber)

**நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறோம் (எண் 11:5).** இவ்வசனத்தில் இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் வெள்ளரிக்காய் சாப்பிட்டதைக் குறித்து கூறியதைக் காணலாம்.



**வெள்ளரிக்காய்** (Cucumis sativus) என்பது Cucurbitaceae குடும்பத்தில் பரவலாக பயிரிடப்படும் ஒரு படர்ந்து செல்லும் கொடியின் தாவரமாகும். பொதுவாக ஒரு காய்கறி என்று நினைத்தாலும், வெள்ளரி உண்மையில் ஒரு பழம்.

கோடைக் காலத்தில் இயற்கை நமக்குக் கொடுத்த அருமருந்து வெள்ளரிக்காய். கோடையில் வெப்பத்தின் அளவு அதிகமாக இருக்கும். அதனால் மனிதர்களின் உடலில் நீரேற்றம் குறைந்து ஆரோக்கியத்தில் குறைபாடு ஏற்படும். இதை சரிசெய்வதற்காகவே இருக்கும் இயற்கையின் ஒரு அற்புத படைப்புதான் வெள்ளரிக்காய். வெள்ளரிக்காயில் 95 சதவீதம் தண்ணீர் உள்ளதால், இது கோடை காலத்தில் உடலை குளிர்ச்சியாகவும், புத்துணர்ச்சியாகவும் வைத்திருக்க உதவுகிறது.



இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட வெள்ளரிக்காய், சுமார் 3500 வருடங்களாக இங்கு பயன்பாட்டில் இருந்திருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது. இந்தியாவில் இருந்துதான் கிரேக்கம், எகிப்து, இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு பரவியது. வெள்ளரி உற்பத்தியில் சீனா முதலிடம் வகிக்கிறது. உலகில் அதிகம் பயிரிடப்படும் காய்கறிகளில் வெள்ளரி நான்காவது இடத்தில் உள்ளது.



பிக்லிங்க், ஸ்லைசிங், கொர்கின்ஸ், கிர்பி, லெமன், அர்மேனியன், ஜாப்னிஸ், இங்லீஷ், பெர்சியன், அமெரிக்கன் ஆகியன வெள்ளரியின் வகைகளாகும்.

ஊர்வரப்பன, கூதாரி, படோலிகை, விரலி, கொடுங்காய் என்பன வெள்ளரியின் வேறு தமிழ்ப் பெயர்கள் ஆகும்.



இலையின் அடிப்பாகத்தில் பூ விட்டு பிஞ்சுகள் உற்பத்தியாகும். கொடிகள் படர்வதற்கு பக்கவாட்டில் சுருள் கம்பி போன்ற வேர்கள் இருக்கும். அதன் உதவியால் நிலத்திலோ மேல் நோக்கியோ பிடித்துப் படரும். வெள்ளரியை சமவெளியிலும், பசுமைக் கூடாரங்களிலும் வளரும். பூக்கள் மஞ்சள் நிறத்தில் இருக்கும். ஆண், பெண் என இரு சமமாகப் பூக்கும். தேனீக்கள் அதிகம் வருவதால் மகரந்தச் சேர்க்கை அதிகமாக ஏற்படும்.

வெள்ளரிகள் ஒரே தாவரத்தில் ஆண் மற்றும் பெண் பூக்களை தனித்தனியாக கொண்ட ஒரே தாவரமாகும். ஆண் பூக்கள் முதலில் தோன்றும் மற்றும் பெண் பூக்கள் சிறிது நேரம் கழித்து தோன்றும். பெண் பூக்கள் பூவின் அடிப்பகுதியில் சிறிய முதிர்ச்சியடையாத பழங்களைக் கொண்டிருக்கும் மற்றும் ஆண் பூக்களுக்கு எதுவும் இருக்காது. மகரந்தம் ஆணிலிருந்து பெண் பூவுக்கு தேனீக்கள் அல்லது பிற பூச்சிகளால் மாற்றப்படுகிறது. காய்க்குள் இரு அடுக்காக விதைகள் இருக்கும்.



வெள்ளரிக்காயில் வைட்டமின் A, வைட்டமின் C, வைட்டமின் K, பொட்டாசியம், மெக்னீசியம், மாங்கனீசு, புரோட்டீன், கால்சியம், இரும்புச்சத்து, பாஸ்பரஸ், கார்போஹைட்ரேட், சர்க்கரை, புரதம், சோடியம், நார்ச்சத்து போன்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. கீழே வெள்ளரியின் பயன்களைக் காணலாம்:



★ வெள்ளரிக்காய் அதிக நீர்ச்சத்துள்ள காய். இது எளிதில் ஜீரணிக்கக்கூடியது. மேலும், செரிமான அமைப்பை சீராக வைத்திருக்கச் செய்கிறது. வெள்ளரி சாறு இரைப்பை மற்றும் குடல் புண்கள், அமிலத்தன்மை, நெஞ்செரிச்சல், மலச்சிக்கல் போன்றவற்றை குணப்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. உடல் உப்புசம் நீங்கும்.

✸ வெள்ளரி சிறுநீரக பாதை பிரச்சினைகளை தீர்க்க உதவும். சிறுநீரகத்தின் அழுத்தத்தை குறைத்து சிறுநீரகங்களை ஆரோக்கியமாய் வைக்கும். வெள்ளரி குடலிலுள்ள நாடா பூச்சிகளை நீக்கும்.

✸ வெள்ளரி சாறு இருவேளை குடித்தால் போதும். உடலிலுள்ள நச்சுகளை வெளியேற்றி ரத்தத்தினை சுத்தம் செய்து விடும். வெள்ளரி ரத்த அழுத்தத்தினை சீராய் வைக்கும். இதிலுள்ள பொட்டாசியம் உப்பு (சோடியம்) அளவினை நீர் செய்து தாது உப்புகளை சீராய் வைக்கும்.

✸ வெள்ளரி சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்தது. வெள்ளரியில் உள்ள ஹார்மோன் உடலின் கணையம் இன்சுலின் ஹார்மோன் சுரக்க உதவுகின்றது.

✸ வெள்ளரி பல வகை புற்று நோய்களை எதிர்க்கும் சக்தி வாய்ந்தது. நோய் எதிர்ப்பு சக்தியும் அளிக்கவல்லது.

✸ வாயில் உண்டாகும் கிருமிகளை அழிக்கும், ஈறுகளை பலப்படுத்தும், அதோடு வாய் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்தும்.

✸ வெள்ளரியில் உள்ள வைட்டமின் கே எலும்புகளை உறுதிப்படுத்தவல்லது. நரம்புகளுக்கு வலு அளிக்கும்.

✸ வெள்ளரிக்காய் கூழ் அல்லது அதன் சாற்றை தோலில் தடவுவது வெயிலின் தாக்கத்தை குறைக்க உதவுகிறது, முகப்பருவை தடுக்கிறது. வெள்ளரி சாற்றை உடலில் தடவினால் வெயிலால் ஏற்படும் கருமையை நீக்கும். சரும புத்துணர்வு ஏற்படும்.

✸ கண்களின் மீது வெள்ளரி துண்டுகள் வைக்க கண் இறுக்கம் நீங்கும். கண் கருமை நீங்கும். சுருக்கம் நீங்கும்.

✸ வெள்ளரி சாறு சிறிது நேரம் தலையில் தடவினால் முடி கொட்டுதல் நீங்கும். முடி பளபளவென இருக்கும்.

✸ அன்றாடம் சாப்பிடும் உணவுகளின் கலோரியை எரிக்க வெள்ளரிக்காய் உதவுகிறது. வயிற்றிலுள்ள கொழுப்பைக் கரைத்து உடல் எடையை குறைக்கச் செய்யும்.

✸ வெள்ளரிப் பழத்தை அரைத்து பால், சர்க்கரை சேர்த்து சாப்பிட்டால் உடல் குளிர்ச்சி பெறும். வெள்ளரிச்சாறுடன், எலுமிச்சை சாறு கலந்து சாப்பிட, உடல் ஊட்டம் பெறும். வெள்ளரிப்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், கோடையில் ஏற்படும் அக்கி, அம்மை நோய் அண்டாது. பசியின்மை, எடைக் குறைவு, மலச்சிக்கல், சிறுநீர் பாதைக் கோளாறு, அமிலத் தன்மை, அல்சர் ஆகிய அனைத்துக்கும் நல்லது. பசியின்மையை சரி செய்து, களைப்பை நீக்கி, வாதத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

✸ வெள்ளரி விதையில் நார்ச்சத்து, மக்னீசியம், துத்தநாகம், வைட்டமின் இ, ஆன்டிஆக்ஸிடன்ட் ஆகியவை உள்ளன. வெள்ளரி விதை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. நீர் சுறுக்கு, கல்லடைப்பு ஆகியவை போக்கும். சரும வறட்சியைப் போக்கி, சருமத்தைப் பளபளப்பாக மாற்றவும், முடி வளர்ச்சிக்கும் உதவும். வெள்ளரி விதையை அரைத்து பாலில் கலந்து குடித்து வந்தால் சிறுநீர் அடைப்பு, சதை அடைப்பு, சிறுநீர்க் குழாய் எரிச்சல் போன்றவை குணமாகும். புற்றுநோயைத் தடுக்கும்; நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.

இயற்கை நம்மை காலத்திற்கேற்ற பாதுகாப்புகளை கொடுத்து நம்மை காக்கிறது. தேவனின் அற்புதப் படைப்பான இந்த வெள்ளரிக்காய்க்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.


தொடர்கதை

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

முப்பது ஆண்டுகாலம் வெளியுலகுக்குத் தெரியாத தனி வாழ்க்கை நடத்திய இயேசு, தன்னுடைய மூன்று ஆண்டு புயல் போன்ற பணிகளால் இலட்சக்கணக்கான மக்களை தன் பால் ஈர்த்து மக்களுக்கு வாழ்வின் தத்துவங்களையும், போலித்தனமான வாழ்க்கையில் அடையாளங்களையும் விளக்கினார். இன்று நல்லது செய்தார் என்ற காரணத்துக்காக சிலுவையில் உயிர்விடுகிறார்.

இயேசுவின் எதிர்ப்பாளர்கள் இதை வெற்றி என்று ஆர்ப்பரித்தார்கள், இயேசுவின் ஆதரவாளர்களுக்கு இது தான் வெற்றி என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

அதே நேரத்தில் எருசலேம் தேவாலயத்தின் திரை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது. அங்கே கூடியிருந்த ஆசாரியர்களும், வேதபாரகர்களும் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள்.



பாறைகள் வெடித்துச் சிதறின. பெரும் மலைகள் பிளந்தன. பல கல்லறைகள் திறந்தன. இறந்த பலருடைய உடல்கள் உயிருடன் எழும்பின!

கொல்கொதா மலையில் சிலுவையருகே நின்றிருந்த நூற்றுக்கு அதிபதியும், காவல் காத்திருந்தவர்களும் நடுநடுங்கினார்கள். மலையே கவிழ்ந்து விடுவதுபோல ஆடியது.

இயேசுவைப் பழித்தவர்கள் எல்லாம் ‘இவர் உண்மையிலேயே தீர்க்கதரிசி தான்.’

‘ஐயோ இவர் தேவனுடைய குமாரனே தான்...’ என்று நடுக்கத்துடன் அலறினார்கள்.

இயேசு வாழ்ந்த காலத்தில் அவரை இரகசியமாய்ப் பின்பற்றிய சீடர்கள் பலர் இருந்தார்கள். பொதுமக்களிடையே தங்களின் மேல் ஒரு முத்திரை விழுந்துவிடக் கூடாது என்பதற்காகவும், உறவினர்களிடையே பிரிவு வந்துவிடக் கூடாது என்பதற்காகவும் அவர்கள் தாங்கள் இயேசுவின் சீடர்கள் என்பதை வெளியே யாருக்கும் சொன்னதில்லை.

அவர்களில் ஒருவர் யோசேப்பு. அவர் அரிமத்தியா என்னும் ஊரைச் சேர்ந்தவர். மிகப்பெரிய செல்வந்தர். அவர், தான் இயேசுவின் சீடர் என்பதை வெளிப்படையாகச் சொன்னதில்லை. ஆனால் இயேசுவின் போதனைகள் மீதும், நித்திய ஜீவன், பரலோகம் பற்றிய கொள்கைகளின் மீதும் நம்பிக்கை வைத்திருந்தார். இயேசு இறந்துவிட்டார் என்னும் செய்தி அவருடைய தயக்கங்களையெல்லாம் உடைத்துவிட்டது. அவருடன் நிக்கொதேமு என்னும் சீடரும் இருந்தார். அவரும் இயேசுவை இரகசியமாய்ப் பின்பற்றியவர். இருவரும் பிலாத்துவின் தலைமைச் சங்கத்தின் உறுப்பினர்களாகவும் இருந்தவர்கள் தான். இவர்கள் இருவரும் இயேசுவின் சீடர்கள் என்பதை பிலாத்து அறிந்திருந்தான்.

அவர்கள் பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலை அடக்கம் செய்ய அனுமதி கேட்டார்கள்.

இயேசு உயிருடன் வாழ்ந்த காலத்தில் அவருடைய சீடர் என்பதை வெளியே சொல்ல தயங்கியவர்கள். இப்போது இயேசுவின் மரணம் அறிந்தபின் தைரியமாக முன்வருகிறார்கள். இயேசுவுடன் இருந்த சீடர்கள் தலைமறைவாகவும், உயிருக்குப் பயந்தும் ஒளிந்து கொண்டிருக்கையில் இரண்டு இரகசியச் சீடர்கள் வெளிச்சத்துக்கு வந்தார்கள்.

பிலாத்து வீரனை அழைத்தான்.

‘இயேசு இறந்து விட்டாரா?’

‘இறந்து விட்டார் இராஜா. அவருடைய விலாவை ஈட்டியால் குத்திப் பார்த்து அவர் இறந்ததை உறுதிப்படுத்தினோம். அவர் ஏற்கனவே இறந்துவிட்டிருந்ததால் அவருடைய கால்களை முறிக்கவில்லை’ வீரன் சொன்னான்.

‘அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை’ என்கிற வேதவாக்கியம் இவ்வாறு நிறைவேறியது. ஆனால் யாரும் அதை அறியவில்லை.

‘சரி... நீங்கள் போய் இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து எடுத்துப் போய் அடக்கம் செய்யுங்கள்’ அனுமதி கொடுத்தான் பிலாத்து.

அவர்கள் இருவரும் சென்று சிலுவையில் ஆணிகளில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவைப் பார்த்தார்கள். அவர்கள் கண்கள் கலங்கின. எத்தனையோ அரும் பெரும் விளக்கங்களைச் சொன்னவர். எத்தனையோ அற்புதங்களின் சொந்தக்காரர். அவருடைய முடிவு இப்படியாகிவிட்டதே என்று அவர்கள் கலங்கினார்கள்.

சிலுவையைத் தரையில் சாய்த்து, ஆணிகளைப் பிடுங்கி இயேசுவின் உடலை அவர்கள் தனியே எடுத்தார்கள். கைகளும் கால்களும் ஆணிக் காயங்களினால் பிளந்திருந்தன. விலாவில் ஆழமாய் ஓர் ஈட்டிக் காயம்.

அன்னை மரியாள் இயேசுவின் உடலை மடியில் ஏந்தினாள். தொழுவத்தில் பிறப்பு. வசதிகளில்லாமல் மடியிலும், கொட்டிலிலும் துயின்ற மகன். இப்போது மரணம். இப்போதும் சொந்த ஊரில் இல்லை. சொந்த வீட்டில் இல்லை. ஏதோ ஒரு மலையில், ஒரு கொடுமையான சாவுக்குள் சென்று இறந்து போய் கிடக்கிறான் மகன். அன்னையின் கண்களில் அழுகை கூட ஆவியாகியிருந்தது.

அவர்கள் இயேசுவின் உடலை மெல்லிய துணிகளால் சுற்றிக் கட்டினார்கள். சுமார் முப்பது கிலோ வெள்ளைப்போளமும், சந்தனத் தூளும் அவர்கள் எடுத்து வந்திருந்தார்கள். அவற்றையும் இயேசுவின் உடலோடு வைத்துக் கட்டினார்கள்.

கல்வாரி மலையருகே ஒரு தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் மலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட ஒரு கல்லறை இருந்தது. அதை யோசேப்பு தனக்காக உருவாக்கியிருந்தார். அந்தக் காலத்தில் பழைய கல்லறைகளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தும் வழக்கமும் இருந்தது. ஆனால் இந்தக் கல்லறை அப்படிப்பட்டதல்ல. புத்தம் புதிதாக செல்வந்தர் யோசேப்பு தமக்காய் உருவாக்கி வைத்திருந்த கல்லறை.

அந்தக் கல்லறையில் இயேசு அடக்கம் செய்யப்பட்டார். கல்லறை வாயில் ஒரு மிகப்பெரிய கல்லினால் அடைக்கப்பட்டது.

இயேசுவின் மரணம் சீடர்களுக்கு அதிர்ச்சியாகவும், கலக்கமாகவும் இருந்த அதே நேரத்தில் மூப்பர்களுக்கும், வேதபாரகர்களுக்கும், ஆசாரியர்களுக்கும் கொண்டாட்டத்தின் நாளாக இருந்தது.


தொடரும்...

# படமும் பாடமும்






# புத்திசாலி வௌவால்!!!



புத்திசாலி வௌவாலின் படத்தைப் பார்த்து நீங்களே வரையுங்கள் குழந்தைகளே.

# வெளவால்

‘‘பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்கவேண்டியவைகள் யாதெனில்: ..... கொக்கும், சகலவித ராஜாளியும், புழுக்கொத்தியும், **வெளவாலும்** ஆகிய இவைகளே (லேவியராகமம் 11:13,19).’’ தேவன் புசிக்கக்கூடாது என்று சொன்ன பறவைகளின் பட்டியலில் வெளவாலும் ஒன்று.

**வெளவால் (Bat)** வெளவால் முதுகெலும்பு (முதுகெலும்பி) உள்ள பாலூட்டி ஆகும். உலகிலேயே பாலூட்டிகளில் பறக்கக்கூடிய ஒரே ஒரு விலங்கு வெளவால்தான். உண்மையில் அது பறவை அல்ல.

பனிப்பிரதேசங்கள் முதல் வறண்ட பாலைவனங்கள் வரை உலகின் அனைத்து பகுதிகளிலும் பல்வேறு வகையான வெளவால்கள் வாழ்கின்றன. உலகம் முழுவதும் 1,400 வகையான வெளவாள்கள் வாழ்கின்றன. இந்தியாவில் 120 சிற்றினங்களை சேர்ந்த வெளவால்கள் உள்ளன. இதன் ஆயுள்காலம் 20 ஆண்டுகள் ஆகும். வெளவால்கள்தான் சிறிய பாலூட்டிகளிலேயே அதிக ஆயுள் காலத்தைக் கொண்டவை.

வெளவால்கள் மனித குடியிருப்புகளை ஒட்டியுள்ள மரங்கள், பாழடைந்த கட்டிடங்கள், குகைகள், பொந்துகள், உயரமான மரங்கள், பழமையான கோவில்களில் கூட்டம் கூட்டமாக வாழும்.

வெளவால்கள் இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இவைகளின் உருவ அமைப்பை வைத்து பெரிய வெளவால்கள் (Mega bats) எனவும் சிறிய வெளவால்கள் (Micro bats) எனவும் பிரிக்கப்பட்டுள்ளன. பெரிய வெளவால்களில் குறிப்பிடத்தக்கது பிளையிங்





பாக்ஸ் (Flying fox) வெளவால் ஆகும். இவை அதிகபட்சமாக 41 செ.மீ வரை வளரக்கூடியது. சிறிய வகை வெளவால்களில் குறிப்பிடத்தக்கது பம்பல்பீ (Bumble Bee) வெளவால் ஆகும். இவை 3 செ.மீ. நீளமும் இரண்டு கிராம் எடையும் உள்ளதாகும்.

வெளவால்களை மூன்று வகையாக பிரித்துள்ளனர். முதல் வகை உருவத்தில் பெரியது. இவற்றின் முகம் நரியின் முகம் போலும் இருப்பதால் ஆங்கிலத்தில் இவற்றை பறக்கும் நரி (flying fox) என்றும் அழைப்பர். பெரும்பாலும் இரவு நேரங்களிலேயே பறந்து திரிந்து உண்டு வாழ்கின்றன. இரவு நேரங்களில் 48 கிலோமீட்டர் தூரம் பயணிக்கும். இவ்வகையான வெளவால்கள் பெரும்பாலும் பழ வெளவால்கள். இவ்வகையான வெளவால்கள் பழங்கள், பூக்கள், தளிர்கள் போன்றவற்றைத் தின்று விதைப்பரவல், மகரந்தச் சேர்க்கைக்குப் பெரும் பங்காற்றுகின்றன. இவை பழத்தின் சாறை மட்டுமே உறிஞ்சி குடிக்கும், பழத்தின் சக்கையை உமிழ்ந்து விடும். ஆனால் வாழைப்பழம் போன்ற மிருதுவான பழங்களை முழுதாக தின்றுவிடும். இவை மலர்களில் உள்ள தேனையும் குடிக்கும், பயிர்களையும் தின்றுவிடும். மகரந்தச் சேர்க்கை மற்றும் விதை பரவல் மூலம் காடுகளின் மீளுருவாக்கம் செய்வதன் மூலம் இவை சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் மனித நலன்களுக்கும் பயனளிக்கின்றன.

மூன்று வகையான பழ வெளவால்கள் மட்டும் குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் மருத்துவ மதிப்புள்ள சுமார் 114 வகையான தாவரங்களின் மகரந்தச் சேர்க்கை மற்றும் விதை பரவலுக்கு உதவுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

இரண்டாம் வகை உருவத்தில் சிறியது. கொசு, சிலந்தி, வண்டு, வெட்டுக்கிளி என விவசாயத்திற்கு தீங்கு செய்யும் பூச்சி இனங்களை தனது உணவுக்காக வேட்டையாடி அதன் பெருக்கத்தை கட்டுப்படுத்துகிறது. ஒரு வெளவால் ஒரு மணி நேரத்தில் சுமார் ஆயிரம் கொசுக்களை உண்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றினங்களைச் சேர்ந்த பூச்சியுண்ணும் வெளவால்கள் இந்தியாவில் உள்ளன.

மூன்றாம் வகை இரத்தத்தை உறிஞ்சி குடிப்பவை. தென் அமெரிக்கா மற்றும் மெக்சிகோவின் காட்டேரி (Vampire) வெளவால்கள் மட்டுமே காட்டு விலங்குகள், ஆடு மாடுகள் போன்ற சில விலங்குகளின் இரத்தத்தை உறிஞ்சி குடிக்கும். இவை மனித இரத்தத்தை உறிஞ்சி குடிப்பதில்லை. இவ்வகை வெளவால்கள் நம் நாட்டில் கிடையாது.

வெளவால்களின் கால்கள் மிகவும் மிருதுவானவை. அதன் மூலம் அவை ஓடி வந்தோ, அல்லது இறக்கைகளை அடித்தோ பறக்கும் அளவுக்கு பலம் கிடையாது.எனவே இவை தலைகீழாக தொங்கி, விமானம் போல கீழே இறங்கி பின்னர் பறக்கிறது. மேலும் தலைகீழாக அவை தொங்குவதன் மூலம் மற்ற வேட்டை விலங்குகளிடம் இருந்து எளிதில் தப்பித்துக்கொள்கிறது. தலைகீழாக அவை தொங்கினாலும் அவற்றுக்கு உடல் சோர்வு ஏற்படுவது இல்லை.

வெளவால்கள் அதிகபட்சமாக மணிக்கு 100 மைல்கள் வேகத்திற்கு பறக்கும். வெளவால்கள் சிறிய வகையாக இருந்தாலும், அதிவேகமாக இலக்கை துரத்திப் பிடிக்கக்கூடியவை. பூச்சி உண்ணும் வெளவால்கள் மீயொலி (Ultra sound) அலையை எழுப்பி பூச்சிகளைப் பிடித்து உண்கின்றன. இவை வெளிப்படுத்தும் மீயொலி அலைகள் அதிக அதிர்வெண்களைக் கொண்டதாக இருக்கிறது. வெளவால்கள் 1,50,000

அதிர்வெண்களை உணர்ந்துக் கொள்ள முடியும். அதனால் தான் வௌவால் பறக்கும் போது ஒலிகளை எழுப்பிக் கொண்டே செல்கின்றது. இந்த மீயொலி அலைகள் எதிரில் இருக்கும் உயிரினம் மேல் பட்டு, வௌவாலின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அவற்றுக்கு வேகமாக திரும்பி வந்து அதற்கு உணவாகின்றன.

வௌவால்கள் பெரும்பாலும் தங்கள் குட்டிகளுடன் குடும்பமாக நீண்ட நாட்கள் இணைந்தே வாழ்கின்றன. இவை ஆண்டுக்கு ஒரு குட்டி மட்டுமே போடும். தாய் வௌவால் தனது குட்டியை லட்சக்கணக்கான வௌவால்களுக்கு மத்தியில் இருந்தாலும் துல்லியமாக அடையாளம் கண்டுவிடும். தனிப்பட்ட ஓசை மற்றும் வாசனை அடிப்படையில் அது தனது குட்டியை இனம் காணுகிறது.

பல வௌவால் இனங்கள் ஆந்தை, கழுகு மற்றும் பாம்பு ஆகியவற்றால் உண்ணப்படுகின்றன. ஆப்பிரிக்கா, ஓசியானியா, ஆசியா, சீனா, ஆஸ்திரேலிய கண்ட நாடான பப்புவா நியூ கினியாவிலும், பசுபிக் பெருங்கடலில் உள்ள தீவுகளிலும், ஆசியாவின் சில பகுதிகளிலும் வௌவால் உணவாக பயன்படுத்தப்படுகின்றது.

வௌவாலுக்கு ஆசனவாய் கிடையாது. இதனால் அது வாயால் சாப்பிட்டு, கழிவுகளை வாயாலே கீழே வெளியேற்றும் வினோத உடலமைப்பை உடையது. வௌவாலின் கழிவுகள் குயானோ என்று அழைக்கப்படுகின்றது. இதில் அதிக அளவு புரத சத்து உள்ளது. அதனால் இது ஒரு நல்ல இயற்கை உரமாக பயன்படுகிறது. இதுவே உலகின் சிறந்த உரமாகும். இவை அதிக அளவு லாபத்திற்கு விற்கப்படுகின்றன. குகைகள் மற்றும் ரூஸ்டிங் மரங்களையும் முகவர்கள் குத்தகைக்கு விடுவர், அதன் மூலம் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு தேவையான உரங்களை பெற்றுக்கொள்வர்.

மருத்துவ பயன்பாடுகளுக்காக இந்தியா முழுவதும் வௌவால்கள் வேட்டையாடப்படுகின்றன. வௌவால்களின் இரத்தத்தை உட்கொள்வது கை-கால் வலிப்பு நோய்க்கு சிகிச்சையளிப்பதாக நம்பப்படுகிறது. வௌவால் கழிவுகள் பாரம்பரிய சீன மருத்துவத்தில் இரவு குருட்டுத்தன்மைக்கான சிகிச்சையாக பயன்படுத்துவர். அதன் கொழுப்பு பக்கவாத நோய்க்கு சிகிச்சையளிப்பதாக நம்பப்படுகிறது. ஆஸ்துமா, காய்ச்சல், சிறுநீரகக் கற்கள் மற்றும் மார்பு வலிக்கு சிகிச்சையளிக்க வௌவாலின் இறைச்சியை உண்கின்றனர்.

வௌவாலை, இறந்தவர்களின் ஆவி என்று சிலர் கூறி வருகிறார்கள். சில இடங்களில் அவை சாத்தான்களின் அடையாளமாகவும், தீய சக்தியின் அடையாளமாகவும் கருதப்படுகிறது. ஆனால் அவை உணவு சங்கிலியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த வௌவால்கள் இல்லை என்றால் பூச்சிகள், கொசுக்கள் போன்ற சிறு உயிரினங்களின் தாக்கம் அதிகரித்து மனிதன் உள்பட பல விலங்குகள் அழிவு நிலையை சந்தித்து இருக்கும் என்றே வல்லுனர்கள் கருதுகிறார்கள்.

வாழிட அழிப்பு, பழத்தோட்ட உரிமையாளர்களால் கொல்லப்படுதல், இறைச்சி மற்றும் மருத்துவ பயன்பாடு, வேட்டையாடுதல் போன்றவற்றால் வௌவால்களில் பல இனங்கள் அருகிவரும் உயிரினங்களில் பட்டியலில் இருக்கின்றன. எபோலா வைரஸ் தொற்றுக்கு வௌவால்கள் காரணமாகச் சொல்லப்பட்டது போன்று இன்று கொரோனா தொற்றுக்குக்கூட வௌவால்கள் சுடப்படுகின்றன. இதனால் வௌவால்களை மக்கள் அழித்து ஒழிக்கின்றனர். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உயிரினத்தை நோய்ப்பரவலைக் காரணம்காட்டி அழிக்க முறப்படுவது முட்டாள்தனமானது.

காடுகள் உருவாவதற்கும், சுற்றுச்சூழலுக்கும் பெரிதும் உதவும் வௌவால் இனங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

வௌவால் பழங்களைச் சாப்பிடச் செல்வதற்கு சரியான வழிகாட்டுங்கள்.



# உலகின் முதல் சுனாமி

நோவா தம் புதல்வர் சேம், காம், யாபேத்து, தம் மனைவி, தம் புதல்வர் மூவரின் மனைவியர் ஆகியோருடன் அன்றே பேழைக்குள் நுழைந்தான். எல்லாவகைக் காட்டு விலங்குகளும், கால்நடைகளும், நிலத்தில் ஊர்வனவும், பறவைகளும், இறக்கைகளையுடைய உயிரினங்கள் அனைத்திலும் வகைக்கு ஒரு ஜோடியாக நோவாவோடு பேழைக்குள் சென்றிருந்தன.

தேவன் அவருக்குக் கட்டளையிட்டபடி உள்ளே சென்றவை எல்லாம் ஒவ்வோர் உயிரினத்திலும் ஆணும் பெண்ணுமாக உள்ளே சென்றன. அதன் பின் கர்த்தர் அவர்களை உள்ளே விட்டு பேழையின் கதவை மூடினார். தொடர்ந்து மழைபெய்து கொண்டிருந்ததால், பெரு வெள்ளம் பூமியில் பெருகிக் கொண்டிருந்தது. வெள்ளம் பெருக்கெடுத்துப் பேழையைத் தூக்க, அது நிலத்திலிருந்து உயர்ந்து எழுந்தது.

அதுவரை நோவாவை கேலி பேசி, கிண்டல் செய்து, அடிக்க வந்தவர்களும் ஏளனமாக பேசியவர்களும் அவமானப்படுத்தியவர்களுமான மழையையே பார்த்திராத அந்த மக்கள் அனைவரும், ''ஐயோ, நோவா சொன்னதை கேட்கவில்லையே இப்போது நாம் என்ன செய்வோம். இந்த அழிவில் இருந்து எப்படி தப்பிக்கப்போகிறோம்'' என்று சொல்லிக்கொண்டு பேழையை நோக்கி ஓடி வந்தனர்.

''நோவா, நோவா, தயவு செய்து எங்களை மன்னித்துவிடு. நீ சொல்லும் போதெல்லாம் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல், உன்னை கேலி பேசி அவமானப்படுத்தி விட்டோம். அதை எல்லாம் மனதில் வைத்துக்கொள்ளாமல் கதவைத்திறந்து எங்களையும் பேழைக்குள் ஏற்றிக்கொள்'' என்று கத்தினர். பேழையைச் சுற்றிலுமாக நின்று, கத்தி கதறி, கண்ணீர் விட்டு, அழுதனர். எல்லோரும் கத்தி கதறி அழும் சத்தம் பேழைக்குள் இருந்த நோவாவிற்கு கேட்டது. ஆனாலும் அவனால் பேழையின் கதவை திறக்க முடியாமல், கர்த்தர் பேழையின் கதவை அடைத்து வெளிப்பக்கமாக பூட்டி இருந்தபடியால் அவனால் கதவைத் திறக்க முடியவில்லை. வேகமாக ஜன்னல் பக்கம் ஓடினான். கழுத்து வரை ஆழமான நீரில் நின்று கொண்டு அல்லல்படும் மக்களின் துயரத்தைக் கண்டான். ஒருசிலர் தங்கள் குழந்தைகளைத் தலைக்கு மேல் தூக்கிப்பிடித்திருந்தனர்.



அப்பொழுது நோவா, ''இந்தக் கஷ்டமெல்லாம் வரும்னுதானே இத்தனநாளா நான் தலைப்பாடா அடிச்சுக்குட்டேன். ஒருத்தனாவது கேட்டீங்களா? ஒருத்தனாவது நம்புனீங்களா? என்னை பைத்தியக்காரன்னு சொன்னீங்களே. இப்ப நீங்க பைத்தியமா கத்துறாப்போல ஆயிடுச்சே. என்னால இந்தக் கதவத் திறக்க முடியாது. தேவன் அதப் பூட்டிட்டாரு, உங்களுக்கு கொடுக்கப்பட்ட தருணங்களை நீங்க வீணாக்கிட்டீங்க. இனி மேலும் அந்த சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைக்காது'' என்று வேதனையுடன் சொன்னான்.

மேலும் மக்கள் எல்லோரும் தங்கள் பலத்தையெல்லாம் திரட்டி பேழையின் மேல் ஏறி அதன் கதவை திறக்க முயற்சி செய்தனர். ஆனாலும் அது அவர்களால் முடியாமல் போயிற்று.

பூமியில் மேல் வெள்ளம் மிகுதியாகப் பெருக்கெடுக்க, பேழை நீரின்மேல் மிதக்க ஆரம்பித்தது. மக்களெல்லாம் தப்பிக்க வேறு வழியிருக்கிறதா? என்று முயற்சி செய்து கொண்டிருந்தனர். சிலர் உயரமான இடங்களைத் தேடி அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தனர். ஆனாலும் மழை நிற்காமல் பெய்து கொண்டிருந்தபடியினால், உயரமான எல்லா இடங்களையும் கூட தண்ணீர் மூழ்கடித்தது.

தண்ணீர் தன் பிரம்மாண்டக் கரங்களால் பூமியை அழுத்திப் பிசைந்தது. தண்ணீரின் கால்களில் பூமியின் உயிரினங்களெல்லாம் மிதிபட்டு உயிர்விட்டன. செடிகள், மரங்கள், மலைகள் எல்லாம் தண்ணீரில் முழுவதுமாக மூழ்கிப் போக, பெரிய மலைகளுக்கும் பதினைந்து முழம் மேலே தண்ணீர் நின்றது. மழை நாட்கள், வாரங்கள், மாதங்கள் என நீண்டு, பூமி நூற்று ஐம்பது நாட்கள் தண்ணீருக்குள் மூழ்கிக் கிடந்தது. நாசியால் சுவாசித்து



வாழ்ந்த அத்தனை உயிரினங்களும் தண்ணீரில் மூழ்கி இறந்தே போயின. மனிதர் எவரும் மிச்சமிருக்கவில்லை.

அத்தனை உயிரினங்களும் மடிந்தபின் வானம் மழை பொழிவதை நிறுத்தியது. பூமியிலிருந்த ஊற்றுகளும் அடைபட்டன. பூமியில் காற்று வீசத் துவங்கியது. பூமியிலிருந்த தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக வற்றத் துவங்கியது. நோவாவின் பேழை அரராத் மலையின் மேல் வந்து இறங்கியது.

மீண்டும் நாற்பது நாட்கள் யாரும் பேழையைத் திறக்கவில்லை. பேழைக்குள் இருந்த நோவா, தண்ணீர் வற்றிவிட்டதா என்பதை அறிய விரும்பினார். அதற்காக தன்னுடைய பேழையில் இருந்த ஜன்னலைத் திறந்து காகம் ஒன்றை வெளியே அனுப்பினார். காகம் வெளியே போய்விட்டு வந்து பேழையின் மேல் அமர்ந்தது. மீண்டும் பறந்து சென்றுவிட்டு வந்தது, இவ்வாறு பலமுறை நிகழ்ந்ததைக் கண்ட நோவா, பூமியில் தண்ணீர் வற்றிவிடவில்லை, காகம் அமர மரங்கள் ஒன்றும் வெளியே தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

சிறிது நாட்களுக்குப் பின், புறா ஒன்றை வெளியே அனுப்பினார். அதுவும் வெளியே பறந்து திரிந்து தான் அமர கிளைகள் ஏதும் தென்படாததால் மீண்டும் பேழைக்கே வந்து சேர்ந்தது. ஏழு நாட்களுக்குப் பின் மீண்டும் புறாவை வெளியே அனுப்பினார் நோவா. அது வெளியே போய்விட்டு பேழைக்குத் திரும்பி வந்தபோது அதன் வாயில் ஓர் ஒலிவ இலை இருந்தது. அதன் மூலம் பூமியில் தண்ணீர் வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பதை நோவா புரிந்து கொண்டார். மீண்டும் ஏழு நாட்கள் கடந்தபின் நோவா புறாவை மீண்டும் வெளியே அனுப்பினார். அந்த புறா அதன்பின் பேழைக்குத் திரும்பவே இல்லை! தண்ணீர் முழுமையாய் வற்றி விட்டது என்பது நோவாவிற்கு விளங்கியது.

தேவன் நோவாவின் பேழையைத் திறந்தார். பூமியில் தண்ணீர் வற்றிப் போயிருந்தது. பூமி வெறுமையாய்க் கிடந்தது பறவைகளின் ஒலியோ, விலங்குகளின் சத்தமோ எதுவும் பூமியில் இல்லை. மனிதர்கள் யாருமே உயிரோடு இல்லை. தேவன் நோவாவிடம், ‘போதும் வெளியே வாருங்கள். வெளியே பூமி தன்னுடைய பாவங்களைக் கழுவி தூய்மையாய் இருக்கிறது. இனிமேல் நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள். பாவம் இல்லாத ஒரு உலகத்தைப் படையுங்கள்’ என்றார். நோவாவின் குடும்பத்தினரும், பேழைக்குள் இருந்த அனைத்து உயிரினங்களும் மீண்டும் பூமிக்குத் திரும்பின. அப்போது பூமியில் அவர்களைத் தவிர யாருமே இல்லை.


உலகம் முழுவதும் அழிந்தாலும் தன்னையும், குடும்பத்தையும் காப்பாற்றிய தேவனுக்கு நோவா நல்ல விலங்குகள், பறவைகளை பலி செலுத்தினார்.

தேவன் நோவாவின் பலியில் மகிழ்ந்து, ‘இனிமேல் நான் பூமியைத் தண்ணீரால் அழிக்கமாட்டேன். நீயும் உன் சந்ததியினரும் பூமியை ஆளுங்கள். விரும்பும் உயிரினங்களை உண்ணுங்கள், ஆனால் இரத்தத்தோடு உண்ணாதீர்கள். ஒரு மனிதனின் இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனிதராலேயே சிந்தப்படும். உங்களோடு மீண்டும் என் உடன்படிக்கையை நிலை நாட்டுகிறேன். இனி பூமி தண்ணீரால் அழிக்கப்படமாட்டாது. இந்த உடன்படிக்கையின் அடையாளமாக வில் ஒன்றை வானத்தின் மீது வைக்கிறேன். மழைநாட்களில் அது நம் உடன்படிக்கையை நினைவுபடுத்தும். நான் இனி பூமியை வெள்ளப்பெருக்கினால் அழிக்கவே மாட்டேன்’ என்றார்.


நோவா தேவனுக்குப் பணிந்து அவருடைய வழிகளில் வாழ்ந்து வந்தார். அவர் மரணமடைந்தபோது அவருடைய வயது தொள்ளாயிரத்து ஐம்பது.

# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்


## (துல்லிய தாக்குதல்)





இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள் - சங்கீதம் 127:4-5




கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார் - சங்கீதம் 34:15,17




இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார் - 2 கொரிந்தியர் 4:6




எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் - ரோமர் 3:23-24

# யோனா

ஒரு நாள் தேவன் தீர்க்கதரிசியான யோனாவின் முன்னால் வந்து நின்றார்.

'யோனா... நினிவே நகர மக்கள் தவறான வழிகளில் போய்க் கொண்டிருக்கிறார்கள். நீ அங்கே போய் தேவன் உங்களை அழிக்கப் போகிறார் என்று அறிவி' என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

யோனா பயந்தார். 'இதெல்லாம் என்னால் முடியாத காரியம். நான் போய் நினிவே நகரில் தேவனுடைய வார்த்தையைச் சொன்னால் என்னைக் கல்லால் எறிந்து கொல்வார்களோ, இல்லை பைத்தியக்காரன் என்று துரத்துவார்களோ தெரியாது' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

இதிலிருந்து தப்பியாக வேண்டும். கண்டிப்பாக நான் நினிவேக்குச் செல்ல மாட்டேன் என்று சொல்லிக் கொண்டே அதற்கு எதிர் திசையில் உள்ள தர்ஷீஸ் என்னும் நகருக்குப் போக தீர்மானித்தார். தர்ஷீசுக்குக் கப்பல் ஒன்று விரைவில் செல்ல இருப்பதாக அறிந்த யோனா விரைந்து சென்று கட்டணம் செலுத்தி கப்பலுள் நுழைந்து கடல் பயணத்தைத் துவங்கினார்.

'அப்பாடா ஒருவழியாகத் தப்பித்தோம்' என்று, பூனை கண்ணை மூடிக் கொண்டு பால் குடித்த கதையாக, நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே கப்பலில் அடித்தளத்தில் போய் நிம்மதியாகத் தூங்கினார்.

தேவன் யோனாவை விடவில்லை. யோனா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது கடலில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது.





மாலுமிக்கோ, பயணிகளுக்கோ காரணம் புரியவில்லை.

‘எத்தனையோ காலமாக இந்த வழியாக பயணம் செய்கிறோம், எப்போதுமே இல்லாத கடல் கொந்தளிப்பு இப்போது வந்திருக்கிறதே!’

‘கால நிலை கூட நன்றாகத் தானே இருக்கிறது? எப்படி இந்தத் திடீர்க் கொந்தளிப்பு ஏற்பட்டது’ என தங்களுக்குளே பேசிக் கொண்டனர். கடல் கொந்தளிப்பு அதிகமாகிக் கொண்டே இருக்க பயணிகள் எல்லோரும் பயந்து நடுங்க ஆரம்பித்தார்கள்.

‘இப்படியே போனால் கப்பல் உடைந்து கடலில் மூழ்கிவிடுவது உறுதி. எனவே கனமான பொருட்களையெல்லாம் கடலில் தூக்கி வீச வேண்டும்’ என்று மாலுமி ஆணையிட்டான்.

அதன்படி கனமான மூட்டைகளும், தானியங்களும் கடலில் தூக்கி வீசப்பட்டன. இருந்த பொருட்கள் எல்லாம் கடலில் வீசப்பட்ட பின்னும் கப்பல் கவிழும் நிலையிலேயே இருந்தது. கடல் கொந்தளிப்போ, கப்பலில் தடுமாற்றமோ நிற்கவில்லை. கடலின் பெரிய அலைகளில் சிக்கி எப்போது வேண்டுமானாலும் கப்பல் உடையலாம் என்னும் நிலை. மாலுமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இந்தப் பயணம் இறுதிப் பயணம் ஆகிவிடும் போலிருக்கிறதே என்று அனைவரும் கலங்கினார்.

‘எல்லோரும் அவரவர் தேவனை நோக்கி ஜெபியுங்கள். எந்த தேவன் வந்தாகிலும் நம்மைக் காப்பாற்றட்டும்’ என்றார் மாலுமி. எங்கும் பதட்டம் பரவிக் கிடந்தது.

எல்லோரும் ஒரே குரலாக அவரவர் தேவனிடத்தில் மன்றாடத் துவங்கினர். பிரார்த்தனைகள் கப்பலில் எல்லா பாகங்களிலும் கேட்டன. ஆனாலும் கடல் கொந்தளிப்பு சற்றும் குறையக் காணோம். இதையெதையும் அறியாமல் யோனா நிம்மதியாகக் கடலின் அடித்தட்டில் இன்னும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

தொடரும்...



# யோனாவும் பெரிய மீனும்

**யோனா 1 - 4 படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. கர்த்தருடைய வார்த்தையை எதற்கு விரோதமாய் பிரசங்கிக்க யோனாவை அனுப்பினார்?
2. நினிவேக்குச் செல்வதற்குப் பதிலாக யோனா எங்கே ஓட முயன்றார்?
3. எந்த நகரத்தில் யோனா கப்பலில் ஏறினார்?
4. யோனாவை கடலில் வீசியது யார்?
5. யோனா கடலில் தூக்கி எறியப்பட்ட பிறகு என்ன நடந்தது?
6. மீனுக்குள் யோனா எத்தனை நாள் இருந்தார்?
7. யோனா நினிவேயை அடைந்தபோது மக்களுக்கு என்ன சொன்னார்?
8. மக்கள் கடவுளின் செய்தியை நம்புவதைக் காட்ட என்ன செய்தார்கள்?
9. யோனாவின் தலைக்கு மேல் வளர்ந்த செடிக்கு என்ன ஆனது?
10. நகரத்தை அழிக்கக் கூடாது என்று தேவன் தீர்மானித்த பிறகு யோனா என்ன செய்தார்?

விடைகள் 23ஆம் பக்கம் பார்க்க





# ஐசுவரியவான்கள் பரலோகத்துக்கு போக முடியாதா?

– ஜெசி, முகப்பேர், சென்னை

வேதத்தில் காணப்படும் இந்த வசனம் பலரால் புரிந்து கொள்ளப்படுவதில்லை. மாற்கு 10:25 ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்.

இந்த வசனத்தை பார்த்தால் ''ஐசுவரியவான்கள் பரலோகத்துக்கு போக முடியாது'' என்ற ஒரு கருத்தை நேரடியாக இயேசு கூறுவது போல காணப்படும். இவ்வசனம் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்று நற்செய்தி நூல்களிலும் காணப்படும் போதிலும், மாற்கு நூலில்தான் இதற்குரிய சரியான விளக்கத்தை பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார்.

மாற்கு 10ம் அதிகாரம் 22 தொடக்கம் 25ம் வசனம் வரை வாசித்து பார்த்தால் இதை தெளிவாக புரிந்து கொள்ளலாம். முதலில் இயேசு ''ஐசுவரியவான்கள் தேவனுடைய



ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது'' என்று சொல்கிறார். அப்போது சீடர்கள் அதை விளங்கிக் கொள்ள முடியாமல் ஆச்சரியப்படுகிறதைக் கண்டவுடன், அதை அவர்களுக்கு விளக்குமுகமாக ''ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைப்பவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது'' என்று கூறினார்.

அதாவது இங்கே இயேசு கூறவருவது யாதெனில், ஐசுவரியவான்களல்ல, தங்கள் ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்கும் ஐசுவரியவான்களே பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டார்கள்.

அது மட்டுமல்ல ஐசுவரியவான்கள் பரலோகம் போக மாட்டார்கள் என்னும் கருத்தை இயேசு கூறியிருக்க மாட்டார். ஏனெனில் விசுவாசிகளுக்கெல்லாம் முன்னோடியான ஆபிரகாம் கூட மிகுந்த ஆஸ்தியுள்ள ஐசுவரியவான். (ஆதியாகமம் 13:2, ஆதியாகமம் 24:35) இயேசு கூறிய உவமையில் ஆபிரகாமின் மடியில் லாசரு தேற்றப்பட்டார். (லூக்கா 16:23) அப்படியானால் ''ஆபிரகாம் நரகத்தில் இல்லை'' என்பது இயேசுவின் கருத்து.

மேலும் ''ஐசுவரியமும் கனமும் தேவனாலே வருகிறது'' என வேதம் கூறுகிறது (1நாளாகமம் 29:12). தேவனே ஐசுவரியத்தை கொடுத்து விட்டு, ஐசுவரியவானை நரகத்தில் தள்ளமாட்டார். தேவனை நம்பாமல் ஐசுவரியத்தை நம்புபவனே பரலோகம் போக முடியாது.

தங்கள் ஆஸ்திகளால் சில ஐசுவரியமுள்ள பெண்கள் இயேசுவுக்கு ஊழியம் செய்தார்கள் (லூக்கா 8:3) என வேதம் கூறுகிறது.

எனவே ஐசுவரியவானாய் இருப்பது பாவமல்ல. ''ஐசுவரியவானாய் இருப்பவன் பரலோகம் போக முடியாது'' என்பது பொய்யானதாகும். தன் ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைப்பவனே பரலோகத்துக்கு போக முடியாது. இப்படிப்பட்டவன் பரலோகத்துக்கு போவதைக் காட்டிலும் ஒட்டகம் ஊசியின் துளைக்குள் நுழைவது இலகுவானது. ஊசியின் வாசல் என்று ஒரு வாசல் இருப்பதாக சொல்லப்படுவதெல்லாம் கட்டுக் கதைகளாம்.

21ஆம் பக்கத்து விடைகள்

## யோனாவும் பெரிய மீனும் - பதில்கள்

1. நினிவே, 2. தர்ஷீஸ், 3. யோப்பா, 4. மாலுமி மற்றும் கப்பலில் இருந்தவர்கள்,
5. சமுத்திரம் அமைதியானது, 6. மூன்று நாள்,
7. நாற்பது நாளில் நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம், 8. உபவாசம் இருந்தார்கள்,
9. பூச்சி செடியை அரித்துப்போட்டது, 10. நகரத்துக்குக் கிழக்கே போய் அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு அதின் கீழ் நிழலில் உட்கார்ந்தார்.

## கிறித்தவனின் வளர்ச்சி நிலைகள்:





# தோட்டம் அமைக்கலாமா?

நகரங்களில் வாங்கிய இடத்தில் ஒரு அடி நிலத்தைக்கூட விடாமல் மொத்த இடத்திலும் வீட்டைக்கட்டுவது தற்போது வாடிக்கையாகிவிட்டது, இந்த நிலை தற்போது பெரும்பாலான கிராமங்களிலும் பரவி வருகிறது. ஆசைக்கு சில மரங்கள் வைக்கவோ அல்லது அழகுக்கு ஒரு தோட்டம் அமைக்கவோ யாரும் விரும்புவது இல்லை.

நமது வீட்டில் சில மரங்களை நாமே வளர்த்து அதில் வந்து அமரும் பறவைகளைப் பார்ப்பது ஒரு அழகு, அந்த மரத்தில் கிடைக்கும் பழங்களைச் சுவைப்பது ஒரு ஆனந்தம்... இதை எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

இயற்கை மனிதனுக்குக் கிடைத்த கொடை. மனதுக்கு இதமளிக்கும் இயற்கை அழகு அனைவரையும் வசீகரிக்கும். இயற்கையின் மீது தொடர்பு இருக்கும் குழந்தைகள் இயல்பாக இருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதாவது அவர்களுக்கு கோபம், பதட்டம் போன்ற பிரச்னைகள் இல்லாதிருப்பது தெரிய வந்துள்ளது. இயற்கையோடு வாழும் குழந்தைகள் இயல்பாக நல்ல உடல்நலத்துடன் இருக்கின்றனர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் சசெக்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில் இந்த முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை என்பது பெரியவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காகப் பார்க்கப்படுகிறது, ஆனால் குழந்தைகளுக்கும் கல்வி கற்பதற்கு இது ஒரு அற்புதமான வழி என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் ஒரு பெரிய கொல்லைப்புறம் வைத்திருந்தாலும் அல்லது பால்கனியில் ஒரு சில பூந்தொட்டிகளை வைத்திருந்தாலும், குழந்தைகள் தோட்டக்கலையிலிருந்து நிறைய கற்றுக்கொள்ளலாம்.

தாவரங்கள் மற்றும் தோட்டத்தை பராமரிப்பது குழந்தைகளுக்கு பொறுப்புடன் இருக்க கற்றுக்கொடுக்கிறது. தோண்டுதல், களைகளை எடுத்தல், விதைகளை நடுதல் போன்றவற்றை செய்வதற்கு வலிமை தேவைப்படும் ஒரு உடல் செயல்பாடு ஆகும். இது குழந்தைகள் சுறுசுறுப்பாக இருக்கவும் ஆரோக்கியமாக உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும் உடற்பயிற்சி போல் செயல்படுகிறது.

தோட்டக்கலை இயற்கையுடன் ஆழமான தொடர்பை வளர்க்கிறது, குழந்தைகள் இயற்கை உலகத்தையும் உயிரினங்களின் ஒன்றோடொன்று சார்ந்திருப்பதையும் அறிந்து கொள்ள உதவுகிறது.

### குழந்தைகளுக்கான தாவரத் தேர்வுகள்

உங்கள் குழந்தைகளுக்கு எளிதில் வளரக்கூடிய மற்றும் வண்ணமயமான தாவரங்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கவும். ஸ்ட்ராபெர்ரிகள், துளசி மற்றும் புதினா போன்ற மூலிகைகள், இனிப்பு பட்டாணி, சூரியகாந்தி, சோளம், கேரட், கீரை, செர்ரி தக்காளி, பீன்ஸ், வாழை, கொய்யா மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவை குழந்தைகள் விரும்பக்கூடிய சில தாவரத் தேர்வுகளில் அடங்கும். இந்த தாவரங்கள் வளர எளிதானது, மேலும் சுவாரஸ்யமான வடிவங்கள், வண்ணங்கள் மற்றும் சுவைகளை வழங்குகின்றன, இது குழந்தைகளுக்கு தோட்டக்கலையை ரசிக்க வைக்கிறது.

### தோட்டக்கலைக்கான கருவிகள், உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு

தோட்டக்கலைக்கான கையுறைகள், தோட்டக்குழாய், ட்ரோவல், மண்வெட்டி, தோண்டி முட்கரண்டி, தோட்டத்து மண்வெட்டி, சக்கர வண்டி போன்ற கருவிகளை உங்கள் குழந்தைகளுக்கு தேர்ந்தெடுத்துக் கொடுங்கள். சூரிய ஒளியில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க குழந்தைகளுக்கு தொப்பியை அணியச் செய்யுங்கள். தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்கள் பரவாமல் இருக்க, மண் அல்லது தாவரங்களுடன் பணிபுரிந்த பிறகு சோப்பு மற்றும் தண்ணீரில் கைகளை கழுவுதல் போன்ற பயனுள்ள சுகாதார நடைமுறைகளை குழந்தைகளுக்கு கற்பிக்கவும்.

### தோட்டக்கலைக்கான சில பயனுள்ள குறிப்புகள்

✸ உங்கள் தோட்டத்தில் ஆர்கானிக் காய்கறிகளை வளர்க்கலாம். அதில் ரசாயனங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை தெளிப்பதை தவிர்க்கவும்.

✸ மொட்டை மாடியில் தோட்டம் அமைக்க குறைந்த மண் இருந்தால், செடம் அல்லது அல்பைன்ஸ் போன்ற பூக்களை நடலாம். இந்த மலர்கள் குறிப்பிட்ட அளவு வறட்சியையும் தாங்கும்.

✸ மழைக் காலங்களில் செடிகளுக்கு நீர் பாய்ச்சுவதைத் தவிர்க்கவும். சில நாட்களில் அதிக மழை பெய்தால், மீண்டும் மண்ணில் ஊட்டச்சத்துக்களை சேர்க்கவும்.

✸ பொதுவாக மொட்டை மாடியில் உள்ள செடிகளுக்கு நான்கு முதல் ஆறு மணி நேர நேரடி சூரிய ஒளி தேவைப்படும். சுவையான காய்கறிகளை வளர்க்க, அவைகளுக்கு அதிக சூரிய ஒளியை ஏற்பாடு செய்யுங்கள்.

✸ தாவரங்களை மிக அருகில் வைத்திருக்க வேண்டாம், ஏனெனில் அவை ஊட்டச்சத்து, நீர் மற்றும் சூரிய ஒளிக்கு போட்டியிடும் மற்றும் அவை தேவைக்கேற்ப முதிர்ச்சியடையாமல் போகலாம்.

தோட்டக்கலை மகிழ்ச்சியாகவும் பலனளிக்கக்கூடியதாகவும் இருக்கும். குறைந்தபட்சம் 2 மாதங்கள் பொறுமையாக இருங்கள். பூப்பதையும், காய்ப்பதையும் பார்க்கும் உங்கள் குழந்தைகள் மகிழ்ச்சியால் துள்ளி குதிப்பார்கள்.

# எங்கள் பேங்க் அக்கவுண்ட் நம்பர்!

நாங்கள் Bank of Baroda வங்கியில் இரண்டு கணக்குகள் வைத்துள்ளோம். செக் அல்லது டிராப்ட் என்னுடைய பெயருக்கு எடுத்து அனுப்புவதாக இருந்தால், எங்களது அலுவலக முகவரிக்கு ரிஜிஸ்டர் தபால் அல்லது கொரியர் மூலமாக அனுப்புங்கள். வங்கிக் கணக்கின் (Account) விபரம்:

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49 510200000122

   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

## அன்றன்றுள்ள அப்பம் வாசகர்களுக்கு!

### ஏலிம் சபைக்கு காணிக்கை அனுப்ப!

ஏலிம் சபைக்கு காணிக்கையோ, தசமபாகமோ அனுப்ப கர்த்தர் உங்களை ஏவுவாரானால், கீழ்க்கண்ட வங்கிக் கணக்குகளை பயன்படுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
ACCOUNT NO. : 49510100000230

ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
ACCOUNT NO : 49510100003063
BANK NAME : BANK OF BARODA
IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
BRANCH : KODAMBAKKAM
CHENNAI - 600024

**ELIM - GOOGLE PAY : 98848 77607**


அப்பொழுது, (உபவாசம் இருப்பதை) அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா
உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம் நடத்தும்
பரிசுத்த ஆசீர்வாத
உபவாச
ஜெபம்
ஒவ்வொரு மாதமும்
நான்காவது சனிக்கிழமை
காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை
PASTOR
OSBORNE
JEBADURAI
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
No.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு,கோடம்பாக்கம்.
+919003067777,+919884908777,+919884916777


இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். சங்கீதம் 63:6
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம் நடத்தும்
முழு
இரவு ஜெபம்
ஒவ்வொரு மாதமும்
இரண்டாவது வெள்ளிக்கிழமை
இரவு 9.30 மணிமுதல் 2.00 மணிவரை
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
No.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு,கோடம்பாக்கம்.
+919003067777,+919884908777,+919884916777
PASTOR
OSBORNE
JEBADURAI




If undelivered please return to:

**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24x7 Prayer 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, website : www.elimgrc.com